Previous Date of examination : 10.03.2026

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
TIRUVARUR.

**STC. No. 856/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | **PW 1 (LW 1 )** | Caste | : | |
| Name | : | **திரு. சந்திரசேகரன்** | Age | : | 58/2026 |
| Father's Name | : | **சோமசுந்தரம்** | Occupation | : | **சிறப்பு உதவி ஆய்வாளர்** |
| Village | : | **திருவாரூர் நகரம்** | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **10th day of March 2026.**

**(Accused present.)**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது திருவாரூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.05.2023 ம் தேதி திருவாரூர் நகர காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது நானும் என்னுடன் பணிபுரிந்த முதல்நிலை காவலர் ஆனந்த்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் தியாகராஜன் அவர்கள் முன்னிலையில் அவருக்கு கிடைத்த ரகசிய தகவலை பெற்று காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து பின்னர் உதவி ஆய்வாளர் தியாகராஜன் ஆகியோருடன் நிலைய எல்லைக்குட்பட்ட திருவாரூர் பேபி டாக்கீஸ் ரோடு அருகே மாலை 18.00 மணிக்கு கண்காணித்து வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்றுக் கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரிக்க தங்களது பெயர் சார்லஸ் நெப்போலியன், த/பெ. பரிசுத்தம், பேபி டாக்கீஸ் ரோடு, சீராத்தோப்பு, திருவாரூர் என்று கூறினார். அவர்தான் ஆஜர் எதிரியாவார். அவரை சோதனை செய்ய அனுமதி கோரிய போது அவர் என்னை சோதனை இடலாம் என்று சம்மத கொடுத்தார்.

2. அவரை சோதனை செய்த போது எதிரி சார்லஸ் நெப்போலியன் என்பவரிடம் இரண்டு பொட்டலம் கஞ்சா இருந்தது. அதை எடை மிஷனில் எடை பார்க்க சுமார் 400 கிராம் எடையுள்ள கஞ்சா போதை பொருள் இருந்தது. அவரை விசாரிக்க கஞ்சா போதை பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக கூறினார். அவர் அந்த கஞ்சாவை வைத்திருக்க எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை. மேற்படி எதிரியை உதவி ஆய்வாளர் 18.20 மணியளவில் குற்றக்காரணம் கூறி கைது செய்தும், எதிரி சார்லஸ் நெப்போலியன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் 18.30 முதல் 18.45 மணிக்குள் பதிவு செய்துக்கொண்டு, அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகளான நானும், முதல் நிலை காவலர் ஆனந்த்குமார் அவர்களும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 01 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் 18.50 மணியளவில் எதிரி வசமிருந்த 400 கிராம் கஞ்சா உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றினார். அதிலும் நானும், முதல் நிலை காவலர் ஆனந்த்குமார்

என்பரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.02 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) அதிலிருந்து 100 கிராம் கஞ்சாவை இரண்டு காக்கி கவரில் உதவி ஆய்வாளர் தனியாக எடுத்து இரசாயன பரிசோதனைக்கு அனுப்புவதற்காக எடுத்து வைத்திருந்தார். பின்பு, எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.281/2023 சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act. ன் கீழ் உதவி ஆய்வாளர் 19.00 மணிக்கு வழக்கு பதிவு செய்வதற்கு நானும், முதல் நிலை காவலர் ஆனந்த்குமார் என்பவரும் உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் விசாரிக்க நடந்த விபரத்தைச் சொன்னேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகள் கையொப்பத்தை தவிர வேறு கையொப்பம் இல்லை என்றால் சரிதான். தடய பொருள் கஞ்சாதான் என்பதற்கு ஆதாரமாக தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி சான்றிதழ் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் உதவி ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எவ்வித கஞ்சாவையும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் புள்ளிவிபர கணக்கிற்காக உதவி ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்ததில் எனது உயர் அதிகாரி சொன்னதன் காரணமாக அதில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. வெள்ளை நிற பாலீதின் பை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கானது புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.**

**ஓம்/- G. லிசி.,**
**நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**

Previous Date of examination : 10.03.2026

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
TIRUVARUR.

**STC. No. 856/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | **PW 2 (LW 3 )** | Caste | : | |
| Name | : | திரு. தியாகராஜன் | Age | : | 59/2026 |
| Father's Name | : | சாந்தாராமன் | Occupation | : | உதவி ஆய்வாளர் |
| Village | : | திருவாரூர் நகரம் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **10th day of March 2026.**

**(Accused present.)**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது திருவாரூர் மாவட்ட குற்ற பிரிவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.05.2023 ம் தேதி திருவாரூர் நகர காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது நானும் என்னுடன் பணிபுரிந்த முதல்நிலை காவலர் ஆனந்த்குமார் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையில் அவருக்கு கிடைத்த ரகசிய தகவலை பெற்று காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து பின்னர் உதவி ஆய்வாளர் தியாகராஜன் ஆகியோருடன் நிலைய எல்லைக்குட்பட்ட திருவாரூர் பேபி டாக்கீஸ் ரோடு அருகே மாலை 18.00 மணிக்கு கண்காணித்து வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்றுக் கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரிக்க தங்களது பெயர் சார்லஸ் நெப்போலியன், த/பெ. பரிசுத்தம், பேபி டாக்கீஸ் ரோடு, சீராத்தோப்பு, திருவாரூர் என்று கூறினார். அவர்தான் ஆஜர் எதிரியாவார். அவரை சோதனை செய்ய அனுமதி கோரிய போது அவர் என்னை சோதனை இடலாம் என்று சம்மத கொடுத்தார்.

2. அவரை சோதனை செய்த போது எதிரி சார்லஸ் நெப்போலியன் என்பவரிடம் இரண்டு பொட்டலம் கஞ்சா இருந்தது. அதை எடை மிஷனில் எடை பார்க்க சுமார் 400 கிராம் எடையுள்ள கஞ்சா போதை பொருள் இருந்தது. அவரை விசாரிக்க கஞ்சா போதை பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக கூறினார். அவர் அந்த கஞ்சாவை வைத்திருக்க எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை. மேற்படி எதிரியை உதவி ஆய்வாளர் 18.20 மணியளவில் குற்றக்காரணம் கூறி கைது செய்தும், எதிரி சார்லஸ் நெப்போலியன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் 18.30 முதல் 18.45 மணிக்குள் பதிவு செய்துக்கொண்டு, அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகளான சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகர், முதல் நிலை காவலர் ஆனந்த்குமார் அவர்களும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள். ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.03 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் எதிரி வசமிருந்த 400 கிராம் கஞ்சா கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றினேன். அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகளான சிறப்பு

உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் மற்றும் காவலர் ஆனந்த்குமார் அவர்களும் கையொப்பம் செய்துள்ளார்கள். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.04 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதிலிருந்து தலா 100 கிராம் கஞ்சாவை இரண்டு காக்கி கவரில் ஆய்வாளர் தனியாக எடுத்து இரசாயன பரிசோதனைக்கு அனுப்புவதற்காக எடுத்து வைத்திருந்தார். பின்பு, எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 281/2023 சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act. ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் புலன்விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

தடய பொருள் கஞ்சாதான் என்பதற்கு ஆதாரமாக தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி சான்றிதழ் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எவ்வித கஞ்சாவையும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பொட்டலங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கானது புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :** இல்லை.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.**

**ஒம்/- G. லிசி.,**
**நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**